மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
பல்லாவரம்.

**O.S.No.1090/2023**
**OLD.No. 750/2012**

**DW 1**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நந்தகோபால் ராவ் | மதம் | : | இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : | தீனதாயளன் | ஊர் | : | |
| வயது | : | | | | |
| தொழில் | : | | | | |
| இனம் | : | | | | |
| கிராமம் | : | | | | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நானும் இவ்வழக்கின் வாதியும் ஒரே நிறுவனத்தில் எத்தனை வருடங்கள் வேலை செய்து வந்தோம் என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் வாதி வழக்கு சொத்தில் அருணா லெதர் கார்பேரேஷன் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றால் ஆம். மேற்படி நிறுவனத்தின் பி.வி பிரசாத் மற்றும் வாதி இருவரும் மட்டும் சேர்ந்து தொழில் செய்து வந்தார்கள் என்றால் இல்லை. நான் கூறுவது தவறு என்**றும்** பி.வி பிரசாத் மற்றும் வாதி இருவரும் மட்டும் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அருணா லெதர் கார்பேரேஷன் என்ற நிறுவனத்தை யும் வழக்கு சொத்தையும் சேர்த்து கிரையம் பெற்றுள்ளேனா என்றால் வழக்கு சொத்தை மட்டும் கிரையம் பெற்றுள்ளேன்.

அருணா லெதர் கார்பேரேஷன் என்ற நிறுவனத்தை யார் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தினை நானும் வாதியும் கூட்டாக கிரையம் பெறுவதற்கு முன்பு பி.வி பிரசாத் என்பவரிடம் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோமா என்றால் ஆம். வழக்கு சொத்தை தவிர நானும் வாதியும் வேறு ஏதேனும் சொத்தினை கூட்டாக கிரையம் பெற்றுள்ளோமா என்றால் ஆம், வழக்கு சொத்தினை கூட்டாக கிரையம் பெறவில்லை. எங்கு கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் உத்திரமேரூரில் வாங்கியுள்ளோம். மேற்டி சொத்து 2 ஏக்கர் 4 செண்ட் இருக்கும் என்றால் 2 ஏக்கர் இருக்கும். 07.04.2008 ம் தேதியன்று மேற்படி சொத்தினை கிரையம் பெற்றுள்ளோம் என்றால் ஞாபகம் இல்லை.

உத்திரமேரூரில் உள்ள சொத்திற்கு வாதி மற்றும் எனது பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் ஆம். இன்றைய தேதி வரை அந்த சொத்திற்கு நான் வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. மேற்படி சொத்திற்கு இன்றைய தேதி வரை வாதி தான் வரி செலுத்தி வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அருணா லெதர் கார்பேரேஷன் என்ற நிறுவனத்தை நானும் வாதியும் சேர்ந்து தான் நடத்தி வந்தோம் என்றால் இல்லை. மேற்படி அருணா லெதர் கார்பேரேஷன் என்ற நிறுவனத்தில் நாங்கள் இருவரும் பங்குதாரர்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.இருவரும் சேர்ந்து தொழில் செய்து வரும் போது கணக்கு வழக்குகளை நான் தான் பார்த்து வந்தேன் என்றால் சேர்ந்து தொழில் செய்யவில்லை கணக்குகள் எதுவும் பார்க்கவில்லை.

நானும் வாதியும் தொழில் செய்து வருவதால் அவருக்கு சொந்தமான வெற்று ஆவணங்கள் என்னிடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தொழில் சம்பந்தமாக வாதி எனக்கு காசோலை கொடுத்துள்ளார் என்றும் அவற்றை நான் வழக்கிற்காக வழக்கு சொத்தின் வாடகை செலுத்திய தொகை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.இன்றைய தேதிவரை எனக்கும் வாதிக்கும் வாடகைத்தாரர் என்றும் மற்றும் உரிமையாளர் என்ற உறவுமுறை இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் விலாசம் எண்.35,சரஸ்வதி முத்துபழனியப்பா நகர், நாகல்கேணி, பம்மல் பஞ்சாயத்து ஆகும். மேற்படி முகவரியில் தான் நானும் வாதியும் அருணா லெதர் கார்பேரேஷன் என்ற நிறுவனத்தை நடத்தி வந்தோம் என்றால் இல்லை.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.